# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 034/நகராட்சி/2019**
**நாள் : 31/05/2019**

**திரு P. சத்தீஸ்குமார்,**
**ஆவடி – 600 054** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஆவடி நகராட்சி,**
**ஆவடி.** – **எதிர் மனுதாரர்**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, ஜீவா நகர், சின்னம்மன் கோவில் தெரு, 175–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு P. சத்தீஸ்குமார் அவர்களின் 03.12.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 034/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி அலுவலர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை முதலானவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, ஜீவா நகர், சின்னம்மன் கோவில் தெரு, 175–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு P. சத்தீஸ்குமார் என்பவர் ஆவடி நகராட்சிக்குட்பட்ட 18–வது வார்டு, ஜீவா நகர் பகுதியில் ஆழ்துளைக் கிணறு மற்றும் குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று 27.11.2018 நாளிட்ட நகராட்சி பொதுத் தகவல் அலுவலர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதென்றும், ஆனால் மேற்குறிப்பிட்ட ஆழ்துளைக் கிணறும், குடிநீர் தொட்டியும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படாத நிலையில், சமூக விரோதிகள் சிலர் கடந்த 15 மாதங்களாக அதைப்பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்து அக்குடிநீர் ஆதாரங்களை மூடி முத்திரையிட ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரிப் பெறப்பட்டது. வார்டு எண்.18, ஜீவா நகர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஆழ்துளைக்கிணறு மற்றும் HDPE சின்டெக்ஸ் தொட்டியிலிருந்து தனி நபர் தனிப்பட்ட முறையில் குடிநீர் விநியோகம் செய்து வந்ததை நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியாளர்களைக் கொண்டு அவ்விணைப்பு துண்டிக்கப்பட்டு தற்போது எவ்வித இடையூறுமின்றி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், நகராட்சிப் பொறியாளர் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. சட்டத்திற்குப் புறம்பாக குடிநீர் எடுத்ததை 14.12.2018 அன்று தான் ஆய்வுக்கு சென்றபோது கண்டறிந்ததாகவும் அதன்பின் சட்டத்திற்குப் புறம்பான குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டு சீரான முறையில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று விசாரணையின் போது பொறியாளர் தெரிவித்தார். மேலும், சம்பந்தப்பட்ட குடிநீர் தொட்டியினை அகற்ற வேண்டாமெனத் தெரிவித்து 25 நபர்கள் கையொப்பமிட்டு வழங்கியுள்ள மனு குறித்தும் தெரிவித்தார். சட்டத்திற்குப் புறம்பாக சிலர் குடிநீர் பயன்படுத்துவது தற்பொழுது கட்டுப்படுத்தப்பட்டு விட்டதென்றும் 27.05.2019 நாளிட்ட விசாரணையின் போது நகராட்சி ஆணையர் உறுதி செய்தார்.

4. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்வதற்கு இரண்டு முறை வாய்ப்பளிக்கப்பட்டது. 25.03.2019 மற்றும் 27.05.2019 ஆகிய நாட்களில் நடைபெற்ற விசாரணைக்கு முறையீட்டு மனுதாரர் வருகை தரவில்லை. எனினும், முறையீட்டு மனுதாரர் நகராட்சிக்கு சம்பந்தப்பட்ட ஆழ்துளைக் கிணறு மற்றும் குடிநீர்த் தொட்டி முறைகேடாகப் பயன்டுத்துவதை தடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்ததைத் தொடர்ந்து நகராட்சி ஆணையர் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதையும் மேலும், தவறாகப் பயன்டுத்தியது தடுக்கப்பட்டது என்பதையும் இம்முறைமன்ற நடுவம் உறுதி செய்துள்ள நிலையில், இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே முடித்து வைத்து ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, மே திங்கள், 30–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. P. சத்தீஸ்குமார்,
எண்.175, சின்னம்மன் கோயில் தெரு,
ஜீவா நகர், ஆவடி,
சென்னை – 600 054.

2. நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
ஆவடி, சென்னை – 600 062..

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி